DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**STC.No.194/2022**
**2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.7 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.முத்துக்குமார் நகல் பரிசோதகர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | காவல் ஆய்வாளர் |
| பெயர் | - | மகேஷ்வரி | வட்டம் | - | கோயம்புத்தூர் |
| க/பெ | - | சிவக்குமார் | சமயம் | - | |
| கிராமம் | - | கோயம்புத்தூர் | வயது | - | 45/2025 |
| சாதி | - | | | | |

**01-04-2025**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

நான் தற்போது கோவை மாநகர ஆர்எஸ்புரம் குற்ற புலனாய்வு பிரிவில் காவர் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25-12-2020-ம் தேதி காலை 10.45 மணிக்கு வால்பாறை காவல் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது வால்பாறை கக்கன் காலனியை சேர்ந்த அருமைநாயகம் என்பவரின் மகன் ஆனந்த் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 318/2020, ச/பிரிவுகள் 294 (b), 323, 506(i) இதசவாக வழக்கு பதிவு செய்யப்பட்டு வாதியின் புகார் மனு மற்றும் அசலையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அனுப்பியும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். **(நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆககுறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அன்றைய தினமே காலை 11.45 மணிக்கு சம்பவயிடமான கக்கன்காலனி புகாதாரர் வீட்டின் முன்பு சாட்சிகள் முரளி மற்றும் காட்வின் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு ஒரு மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆககுறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் சாட்சிகள் மனோஜ், ரமணி, பிந்து, கவிதா, முரளி மற்றும் காட்வின் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியானவர் கோவை அமர்வு நீதிமன்றமூலமாக பிணை பெற்று சரணடைந்ததால் அவரை கைதுசெய்யவில்லை. பின்னர் காயம்பட்ட மருத்துவர் திருமதி. மலர்கொடி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். மருத்துவர் தன் காயச்சான்றில் காயத்தின் தன்மை குறித்து கருத்து கூற இயலவில்லை என சான்று அறிவித்தார். **(அந்த காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**இத்துடன் புலன் விசாரணை முடித்து 22-04-2021-ம் தேதி எதிரி மீது ச/பிரிவுகள் 294 (b), 323, 506(i) இதசவின் படி நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

வழக்கு சம்பவம் எப்போது நடந்ததாக யார் வந்து புகார் கொடுத்தார்கள் என்றால் புகார்தாரர் ஆனந்த் என்பவர் 25-12-2020-ம் தேதி காலை 10.45 மணிக்கு நிலையம் ஆஜராகி 24-12-2020-ம் தேதி 18.30 மணிக்கு வழக்கு சம்பவம் நடந்ததாக புகார் கொடுத்தார். புகாரில் நான் டேட்டா என்றி ஆப்புரேட்டராக பணிபுரிகிறேன் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அவர் எங்கு வேலை செய்கிறார் என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை. புகார்தாரர் 4 மாடி குடியிருப்பில் 2-வது மாடியில் குடியிருப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த 4 மாடி குடியிருப்பில் 4 தளத்திலும் ஆட்கள் குடியிருக்கிறார்களா என்று நான் விசாரித்தேனா என்றால் இல்லை. சம்பவயிடத்திற்கு நான் எத்தனை மணிக்கு போனேன் என்றால் 11.45 மணிக்கு போனேன். நான் சம்பவயிடம் செல்லாமலேயே அலுவலகத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த மதத்தை சேர்ந்தவர் என்று விசாரித்தேனா என்றால் இந்து மதத்தை சேர்ந்தவர். பாரத்சேனா என்ற அமைப்பில் உள்ளார். அ.சா.1 கிறிஸ்துவ மதத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் சொன்னது போல எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரி இந்து மதத்தை சேர்ந்தவர் அ.சா.1 கிறிஸ்துவ மதத்தை சேர்ந்தவர், இந்து கிறிஸ்துவ மதங்களுக்கு இடையே பிரச்சனை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக அ.சா.1 கொடுத்த தவறாக புகாருக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.